**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC No.1229/2025**

**Prosecution witness : அ.சா.1** **Date : 09.03.2026**

| | |
|---|---|
| **Name : செந்தில்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொம்மியம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் என் தம்பிகள். கடந்த 2018 ம் வருடம் மாலை நானும் என் தம்பிகளான ஆஜர்எதிரிகளுடன் குடும்ப பிரச்சனை காரணமாக பேசிக் கொண்டிருந்தேன். அப்போது கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் யாரோ சிலர் என்னை கீழே தள்ளி அடித்துவிட்டனர். கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 09.12.2018 ம் தேதி மாலை 4 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக பொம்மியம்பட்டி பேருந்து நிறுத்தம்

அருகே வந்த போது ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி இரண்டு எதிரிகளும் கைகளால் என்னை மாறி மாறி அடித்ததால் இடது கையில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:27:45 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC No.1229/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 09.03.2026**

| Name : செல்வி | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.சரவணன், காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 09.12.2018-ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு ஆன பிறகு அங்கு உள்நோயாளியாக இருந்த செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.519/2018 u/Sec. 294(பி), 323 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் மனு **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை **அ.சா.3** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 09.12.2018 ம் தேதி காலை 07.30 மணிக்கு சம்பவ இடத்தில் சென்று சாட்சிகள் வெங்கடேஷ் மற்றும் செந்தமிழ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் செந்தில்குமார், செல்வி, சித்ரா, காளிசாமி, மருத்துவர் ராஜேந்திரன், வெங்கடேஷ் மற்றும் செந்தில் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த செந்தில்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 09.12.2018 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 02.01.2019 ம் தேதி **நி.கு.எண்.519/2018 u/Sec. 294(பி), 323 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:27:55 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**